# எழுத்து ஆவணங்களில் மக்கள் நல நடவடிக்கைகள்

**முனைவர் ஜெ.ஆர். சிவராமகிருஷ்ணன்**
உதவிப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, ஆத்தூர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

பண்டைய தமிழர்களின் வரலாறு, பழக்கவழக்கங்கள், பண்பாடு, வாழ்வியல் நெறிமுறைகள் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கு தொல்லியல் சான்றுகள் எவ்வாறு உதவிபுரிகின்றனவோ அதேபோன்று கல்வெட்டுக்களும் துணைசெய்கின்றன. கல்வெட்டுக்கள் அக்காலத்திய வினோத நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடிகளாக விலங்குபவை. இவைகளில் கற்பனைக்கோ, கட்டுக்கதைகளுக்கோ இடமில்லை. அவற்றில் உள்ளதை உள்ளவாறு உணரத்துகின்ற உண்மைக்கு மட்டுமே இடமுண்டு. கல்வெட்டுக்கள் கொடை நிகழ்வுகளின் ஆவணத் தொகுப்பன்று. அது மக்களின் நலன் எந்தவித்திலும் பாதித்துவிடக்கூடாது என்ற அறக்கோட்பாட்டின் மொத்த கருவூலமாகும். இக்கட்டுரை கல்வெட்டாவணங்களில் உள்ள மக்கள் நல நடவடிக்கைகள் பற்றி ஆய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பெருவழிகள்

பண்டையகாலத்தில் வாணிப தொடர்புகளுக்கு முன்னோடியாக விளங்கியவை பெருவழிகளாகும். இப்பெருவழிகள் இன்றைய தேசியநெடுஞ்சாலைகளுக்கு ஒப்பானவை. வழி, நெறி, பெருவழி, காட்டுவழி, நாட்டு வழி எனக் கல்வெட்டுக்களும். அத்தம், நெறி, வழி, வதை, இட்டுவழி என இலக்கியங்களும் அக்காலத்தில் இருந்த வழிகளைப்பற்றி சுட்டுகின்றன. கல்வெட்டுக்கள் குறிப்பிடும் வழிகளை உள்ளூர் வழிகள், பேரூர் போகும் பெருவழிகள் என இருவகைகளாகப் பிரிக்கலாம். பெருவழிகளின் அகலம் பற்றிச் சில கல்வெட்டுக் குறிப்புகள் கிடைக்கின்றன. “(இரண்டு) 2கோல் அகலம் அருவி வழிக்கு மேற்கு போந்த பெருவழிக்கு வடக்கும் மேற்கு எல்லையாகப் பெருமக்கள் வழியாக வைத்த நிலம் 2 கோல் ……” என்று திருவாலங்குடி கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டிலிருந்து அருவி வழிச் சாலையானது 2 கோல் அகலம் கொண்டதாகும். பெருமக்கள் வழியை உருவாக்க 2 கோல் அகல நிலம் ஒதுக்கப்பட்டதையும் கல்வெட்டு கூறுகிறது. ஒரு கோல் 12அடி அல்லது 16 அடியாகக் கொள்ளலாம். ஆகவே இப்பெரு வழிகள் குறைந்தது 24 அடி அகலம் முதல் அதிகப்பபடியாக 32 அடி கொண்டதாகவும் இருந்திருக்க இடமுண்டு.

மேலும் ஒவ்வோர் இனத்தவருக்கும் தனித்தனிச் சுடுகாடும், அச்சுடுகாடுகளுக்கு செல்லும் தனித்தனி வழிகளும் இருந்துள்ளன. “வெள்ளாளன் சுடுகாட்டுக்குப்போகும் வழியும், “வண்ணார் பிணம் போகும் பெருவழி”, “பிணம் போகும் பெருவழி” எனப் பண்டைய காலத்தில் சுடுகாட்டு வழிகளைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகளும் உள்ளன.

தற்காலத்தில் அரசு நினைத்தால் மக்களின் நிரந்தர உடைமைகளான நிலங்கள், வீட்டு மனைகளைக் கையகப்படுத்திக்கொள்ள உரிமையுண்டு. இதில் உடைமைகளை இழந்த மக்களின் நலன் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. உதாரணமாக சாலை விரிவாக்கம், புதிய அணைகள் கட்டுதல், சுரங்கம் அமைத்தல், நிலவாயு எடுத்தல், புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல் போன்ற காரணங்களுக்காக மக்கள் தங்களது விளைநிலங்கள், குடியிருப்புப் பகுதிகளை அரசிடம் இழப்பது தற்காலத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. குறிப்பாக சாலை விரிவாக்கத்தின்போது விவசாயிகளைப் போன்றே வியாபாரிகளின் கடை மற்றும் மனைகளை அரசு கையகப்படுத்துவதினால் அவர்களின் வர்த்தக வாழ்வாதாரம் நிரந்தரமாகப் பாழ்பட்டுப் போகிறது. சிலநேரங்களில் நிலக்கரி சுரங்கம், இரும்புத்தாது சுரங்கம் போன்ற பணிகளுக்காக பெரிய ஊர்கள் முழுமையாக அரசால் கையகப்படுத்தப்படுகிறது. அப்பகுதியில் வாழ்ந்த மக்களின் நலனில் அக்கறைகாட்டாமல் வேறுஇடத்தில் குடியேற்றப்படுவதால் அவர்களின் முழு வாழ்வாதார அலகுகளான அத்தியாவசிய தேவைகளின் கட்டமைப்புகள் அங்கு சரியாக கிடைக்காதபோது அவர்கள் தவறான பாதைகளுக்கு செல்வதோடு சட்ட ஒழுங்கு சீர்குலைவிற்கும் வழிவகுக்கிறது. இந்த குளறுபடிகளுக்கு காரணம் அரசின் பொறுப்பற்ற தன்மையே. ஆனால் பண்டைய காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த தமிழ் வேந்தர்கள் புதிய குடியேற்றங்களை மேற்கொள்ளும் பொழுது அவர்கள் பின்பற்றிய வழிமுறைகள் சிறப்பு வாய்ந்தவையாக உள்ளது.

**ஊர் அமைப்பு**

பண்டையகாலத்தில் ஊர்களில் எந்தவகையான கட்டமைப்பு படிநிலைகள் கையாளப்பட்டுள்ளன என்பதைப் பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்ட கூரம் செப்பேட்டின் மூலம் உணரமுடிகிறது. கி. பி.670 முதல் கி.பி.685 வரையில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன் முதலாம் பரமேஸ்வரவர்மனாவான். இவன் வெளியிட்ட கூரம் செப்பேட்டில் பல்லவர் காலத்தில் இருந்த ஊர் அமைப்பியல் அலகிடுகள் பற்றி விரிவாக அறியமுடிகிறது. இச்சேப்பேடு கூரம், பரமேஸ்வரமங்கலம் என்ற இரு ஊர்களின் சிறப்புகளைப் பற்றி குறிப்பிடுகிறது. இதில் பரமேஸ்வரமங்கலம் என்ற ஊர் இவனது காலத்தில் புதியதாக உருவாக்கப்பட்டதாகும்.

**ஊர் உருவாக்கத்தில் கடைபிடிக்கப்பட்ட முக்கிய அலகுகள்**

1. விவசாய உற்பத்திக்கு ஏற்ற மண்வளம்
2. நிரந்தர நீர் மேலாண்மை திட்டம்
3. தண்ணீர் பகிர்மான அலகுகள்
4. கட்டுமானத்திற்கு ஏற்ற தரமான மண்
5. கோயில்
6. மண்டபம்
7. அறச்செயல்களுக்கான நிரந்தர வைப்புக்காக வழங்கப்பட்ட தானங்கள்
8. வணிகப் பெருமக்கள்
9. கருவி தயாரிப்போர்
10. அறிவுசார் பெருமக்கள்
11. திருவிழா மற்றும் வழிபாடு
12. மொழியியல் கூறுகள்
13. உற்பத்தியும் பங்கீடுகளும்.

மேற்கண்ட அலகுகள் பல்லவர் காலத்தில் ஊர் - நகர உருவாக்கத்தில் பின்பற்றப்பட்டவை. எதிர் காலங்களில் உருவாக்கப்படும் புதிய ஊர்களிலும் மேற்கண்ட அலகுகள் பின்பற்றப்பட வேண்டும் என்ற தொலைநோக்கு அடிப்படையிலேயே அவைகளைச் செப்பேட்டில் பொறிக்க ஆணையிட்டிருக்க வேண்டும். மேலும் இந்த அலகுகளை அப்படியே அச்சுபிசகாமல் புதியதாக அமைக்கப்பட்ட பரமேஸ்வரமங்கலம் உருவாக்கத்தின்போதும் அரசு அதிகாரிகள் பின்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.
வளமான மண்

முதலாம் பரமேஸ்வரவர்மன் காலத்தில் உருவாக்கப்பட்ட பரமேஸ்வரமங்கலம் தொண்டை நாட்டின் ஊற்றுக்காட்டுக் கோட்டத்தில், நீரவேளூர் நாட்டில் அமையப் பெற்றது. (இவ்வூர் மதுராந்தகம் தாலுக்காவில் கிழக்குப் பகுதியில் பாலாற்றின் தெற்கில் கடற்கரை அருகே உள்ளது. பரமேஸ்வரமங்கலத்தில் உள்ள சைலேச்வரம் என்று முன்பு அழைக்கப்பட்ட இக்கோயிலில் இருபது பல்லவர் கால கல்வெட்டுக்கள் உள்ளன) புதியதாக அமையவுள்ள ஊருக்காக 6300 குழி (சுமார் 98.44 ஏக்கர்) நிலப்பரப்பு தேர்வு செய்யப்பட்டது. மக்கள் வாழ்வதற்கான திறம் வாய்ந்த இந்த பெருநிலப்பரப்பு ஆய்வை முன்னின்று நடத்தியது ஆணத்தி என்ற அரசு அலுவலர். இவரது முழுப்பெயர் உத்தரகாரணிகா மகாசேனதத்தன் என்பதாகும். இடத்தேர்வில் கட்டுமானத்திற்கு ஏற்ற அலகு மட்டும் பின்பற்றப்படவில்லை. மாறாக, வேளாண்மைக்கு ஏற்ற வளமான நிலப்பகுதியாக இருந்தால்தான் பரமேஸ்வரமங்கலத்தில் வாழப்போகும் மக்கள் எதிர்காலத்தில் உணவு உற்பத்தியில் தன்னிறைவை எட்டமுடியும். இந்தப்பணியை திறம்பட செய்து முடித்தப்பெருமையும் உத்தரகாரணிகா மகாசேனதத்தன் என்பவனையேச் சாரும்.

## நிரந்தர நீர் மேலாண்மை

முதலில் ஊர் அமையவுள்ள பகுதியில் “பரமேஸ்வரத்தடாகம்” என்ற ஏரி வெட்டப்பட்டது. அந்த ஏரியில் நிரந்தரமாக தண்ணீர் இருக்க வேண்டும் என்பதற்காக பாலாற்றில் இருந்து “பெரும்பிடுகு” என்ற வாய்க்காலொன்று வெட்டப்பட்டு அதை பரமேஸ்வரத் தடாகத்தோடு இணைக்கப்பட்டது. இதனால் நிரந்தர நீர் இருப்பு ஏற்படுத்தப்பட்டு, நிலத்தடி நீர்மட்ட உயர்விற்கு காரணமாக அமைந்தது. இந்தத் தொழில் நுட்பம் கிணற்று நீர் பயன்பாட்டிற்கு வழிவகுத்தது. இதனால் வாய்க்கால் மூலம் பெறப்படும் தண்ணீர் நிலத்தை எட்டாமல் போகும்பட்சத்தில் கிணற்றுப்பாசனம் வேளாண் உற்பத்திக்கு சாதகமாக்கப்பட்டது. மேலும் ஊர்பகுதி மக்களுக்கு தூய்மையான குடிநீர், கிணறுகள் மூலம் தடையின்றிக் கிடைப்பதும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

## தண்ணீர் பகிர்மான அலகுகள்

பரமேச்சுரமங்கலத்தில் தண்ணீரைப் பயன்படுத்தும் பகிர்மானங்கள் அனைத்தும் பொதுவில் வைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக “பரமேசுவர தடாகத்துக்கு பாலாற்று நின்றும் தொண்டின பெரும்பிடுகு காலிந் புழுதிப்பாடும் நீரின்த வழியாலே தலைவாயும் தலெப்பபெழையும் ஊற்றுக்காலும் தொண்டின் நிலமெல்லாம்” என்ற செப்பேட்டு வரிகளில் குறிப்பிடப்படும் தலைவாய் என்ற தலைமையான வாய்க்கால், புழுதிப்பாடு என்ற புழுதித் தன்மை உள்ள நிலங்கள், ஊற்றுக்கால் என்ற பெரியவாய்க்காலில் இருந்து அமைக்கப்படும் சிறு வாய்க்கால்கள், பாசனத்திற்குரிய நீரோடும் வாய்க்கால்கள், ஏரி என்ற தடாகம், ஏரியிலிருந்து தண்ணீரைப் பாசனத்திற்கு திறக்கப்படும் மதகுகள் போன்றவைகளின் மீதான முழுஉரிமை உற்பத்தியாளர்களான விவசாயிகளிடமே இருந்தது. இது தண்ணீரால் மக்களிடையே தோன்றும் பிணக்குகளை இது நிரந்தரமாகத் தடுக்க காரணமாக அமைந்தது.

## கட்டுமானத்திற்கு ஏற்ற தரமான மண்வளம்

ஊர் உருவாக்கத்தினை முன்னின்று நடத்திய உத்தரகாரணிகா மகாசேனதத்தன், ஊர் அமையவுள்ள இடங்களைச் சரியாக தேர்வு செய்தபிறகுச் “சூளைமேட்டுப்பட்டி” என்ற நிலப்பகுதியை ஒதுக்கினார். இப்பகுதியிலிருந்து கோயில் மற்றும் வீடுகள் கட்டுவதற்குத் தேவையான செங்கற்களை அனைத்துத் தரப்பு மக்களும் தயாரித்துச் சூளைகளில் வைத்து சுட்டுக்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டது. மேலும் மட்பாண்ட உற்பத்திக்கு ஏற்ற மண் இந்த சூளைமேட்டுப்பட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

## மண்டபம்

பரமேச்சுரமங்கலம் மற்றும் கூரம் ஆகிய ஊர்களில் உருவாக்கப்பட்டிருந்த கோயில் மண்டபம் போன்றவைகளின் பயன்பாட்டிற்காக நிரந்தர வைப்பக நிலங்கள் தானமாக அரசனால் வழங்கப்பட்டன. பண்டைய காலத்தில் கோயில்கள் உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கம் மக்களை ஆன்மிகத்தின் வழியாக நல்லொழுக்கத்தைப் பெற வைப்பதற்காகவே. குறிப்பாகச் சமய திருவிழாக்கள் மூலம்

மக்களிடம் உள்ள வேற்றுமைகளை அகற்றும் பணியைக் கோயில்கள் செய்தன. மேலும் ஊர் நடுவில் பாரதம் வாசிக்கும் மண்டபம் இருந்துள்ளது. இம்மண்டபத்தில் இரவு நேரங்களில் விளக்கு எரிக்க, தண்ணீர் வைப்பதற்கு, பாரதம் வாசிப்பவர்களுக்கு என அனைவருக்கும் நிரந்தர நிலதானம் வழங்கப்பட்டிருந்தது. இதன்மூலம் எந்நாளும் தடையில்லாமல் மண்டபப்பணிகள் நடைபெறக் காரணமாக அமைந்தது. குறிப்பாகப்

பாரதம் வாசிக்கும் மண்டபம், ஊடக மையமாகச் செயல்பட்டது. காரணம் இம்மண்டபங்கள் அரசின் ஆணைகள் மற்றும் சட்டதிட்டங்களை வெளியீடு செய்யும் மையமாகவும், மக்களின் பொழுதுபோக்கு இடமாகவும், கல்வி நிலையமாகவும் விளங்கின. இது நீதிக்கதைகளையும், புராணக் கதைகளையும் கூறி மக்களை நல்வழிப்படுத்தும் மற்றும் பொழுதுபோக்கும் இடமாக விளங்கியது.

## உற்பத்தி பெருமக்கள்

ஊர் நிர்மானத்தில் மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொறுப்பும் கவனத்தில் கொள்ளப்பட்டது. எண்ணெய் வணிகர்கள், சிறு தானியங்களை விற்பனை செய்யும் கூலவணிகப் பெருமக்கள், பெருவணிகர்கள், நெசவுத்தொழில் செய்வோர், பொற்கொல்லர், மட்பாண்ட தொழிலாளர், விவசாயிகளுக்கு தேவையான வேளாண் உற்பத்தி கருவிகளை செய்து தரும் கொல்லர்கள் மற்றும் தச்சர்கள் என மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்யும் அனைத்து அலகுகளும் ஊர் உருவாக்கத்தின் பொழுது பல்லவ அரசனால் கையாளப்பட்டுள்ளதைக் கூரம் செப்பேட்டின் வழியாக உணரமுடிகிறது.

## கருவிகள் தயாரிப்பவர்கள்

வேளாண் குடிகளுக்குத் தேவையான உலோக கருவிகள், மக்களின் சுய பாதுகாப்பிற்கான ஆயுதங்கள் போன்றவற்றறைத் தயாரித்து கொடுக்கும் கொல்லர்களுக்கு ஊதுலைகள், உலைக்களம், தங்கும் மனைகள் போன்றவை நிரந்தரமாக அமைத்துக்கொள்வதற்கு இடம் ஒதுக்கப்பட்டது. இவ்வாறு புதிய குடியேற்றங்களை ஏற்படுத்தும்பொழுது மக்களுக்குத் தேவையான அனைத்து வாழ்வியல் அலகுகளும் கிடைத்திட அக்கறையுடன் பரமேஸ்வர்மன் செயல்பட்டுள்ளான் என்பதைச் செப்பேட்டின் வாயிலாக அறியமுடிகிறது.

## சாலைவிரிவாக்கத்தில் மக்கள் நலன்

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் உள்ள அச்சுதமங்கலம் என்னும் ஊரில் சோமனாத சுவாமி கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழனின் (கி. பி.1237) இருபத்தி ஒன்றாம் ஆட்சியாண்டு கல்வெட்டு தெருக்கள் விரிவாக்கத்தில் கடைபிடிக்கப்பட்ட விதிமுறைகள் பற்றி கூறுகிறது. இவ்வூரில் நடைபெறும் விழாக்களின்போது வெளியூர்களில் இருந்து அதிக மக்கள் வருவதாலும், சுவாமி திருவுலா செல்கின்றபோது இவ்வூரின் தெருக்களின் அகலம் போதாமையாலும் மக்கள் சிரமத்திற்கு உள்ளானர்கள். அதனைச் சரிசெய்ய நினைத்தது அரசு. தெருக்களை அகலப்படுத்தும்போது பாதிக்கப்படும் வீட்டு மனை, கடைமனைகளின் உரிமையார்கள் அரசு அதிகாரியிடம் முறையிட்டனர். அவற்றை விசாரித்த அதிகாரி சில விதிமுறைகளைக் கூறினார். அதனையேற்ற மக்கள் திருப்தி அடைந்தனர். அச்சுதமங்கலத்தில் இடிக்கப்படும் மனைகளில் உள்ளோரை அனைத்து வசதிகளுடன் புதியதாக ஏற்படுத்தப்படுகின்ற இரண்டாம் தெருவில் குடியேற்றம் செய்யப்பட்டது. பழைய தெருவில் மனைகள் வாங்கியிருந்த வியாபாரிகளுக்கு அதேவிலையில் புதிய இரண்டாம் தெருவில் மனைகள் ஒதுக்கப்பட்டன. அதோடு மட்டுமல்லாமல் புதிய மனைகள் வாங்குவதாயின் புதியதாக நிச்சயிக்கபட்டுள்ள விலையினை கொடுத்து வாங்கிக்கொள்ளலாம். விற்க நினைத்தால் அரசு நிர்மாணித்துள்ள அன்றைய விலையில் விற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டது. அதாவது புதிய மனைகளை விற்கவும், பிற மாற்றங்கள் செய்துகொள்ளவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுஉரிமை வழங்கப்பட்டது. அச்சுதமங்கலம் தெருக்கள் விரிவாக்கத்தில் மக்களின் நலன் பிரதானமாக பாதுகாக்கப்பட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்டவர்களின் நில உரிமை முழுவதும் முன்பு இருந்ததைப் போன்று அப்படியே

தொடர வழிவகை செய்யப்பட்டது. நமது மன்னர்கள் நிலங்களை கையகப்படுத்தும்பொழுது மேற்கொண்ட நடவடிக்கைகளை நிகழ்கால அரசுகளும் அப்படியே பின்பற்றினால் மக்களிடம் நன்மதிப்பைப் பெறமுடியும்.

### வரியேய்ப்பு செய்வோர் மீது நடவடிக்கை

அக்காலத்தில் அரசுக்கு நிலவரியே நிரந்தர வருவாயாகும். இவ்வரியை "அறு கூறினால் புரவு மாயதியும் பொன்னும் பெறுமாறு சோழகோன்.." என்ற கல்வெட்டு வரியில் ஆறில் ஒருபங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டதை அறியமுடிகிறது. இதில் "புரவு" என்ற சொல் நிலவரியைச் சுட்டும் சொல்லாகும். நிலவருவாயை ஒவ்வோரு ஊர்களிலும் வசூலிப்பதற்கெனப் புரவு வரித்திணைக்களநாயகம், புரவுவரியார், புரவுவரி சீகரணம் போன்ற அதிகாரிகள் நிலவரி உள்ளிட்ட வரிகளை வசூலித்து அரசுக்குச் செலுத்த நியமிக்கப்பட்டிருந்தனர். நிலவருவாயைத் தவறாமல் அரசுக்கு செலுத்துவது மக்களின் கடமையாக இருந்தது. சிலநேரங்களில் நிலவரியேய்ப்பும் நடந்துள்ளது. அவ்வாறு நிலவரியைச் செலுத்தாதவர்கள் மீது நிர்வாகக்குழு எடுத்த நடவடிக்கையைப் பற்றி பார்ப்போம்.

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் உள்ள ஓமாம்புலியூரில் பிரணவ வியாக்ரபுரீஸ்வரர் கோயிலில் உள்ள இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் கால கல்வெட்டு நிலவரி செலுத்தாதவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிக் கூறுகிறது. வடகரை விருதராசபயங்கர வளநாட்டு, மேற்கா நாட்டு பிரமதேயம் ஸ்ரீஉலகளந்த சோழச் சதுர்வேதிமங்கலத்து ஊரில் இருந்த சில நபர்கள் நிலத்தின் மீதான வரிகளைச் செலுத்தாமல் ஊரைவிட்டுச் சென்றுவிட்டனர். இவர்களுக்கு இவ்வூரைச் சேர்ந்த பிராமணர்கள் சிலர் பிணையளித்திருந்தனர். பிணையளித்த இவர்களும், செலுத்தாத அவ்வரியைச் செலுத்த ஆணையிடப்பட்டது. ஆணைப்படி வரி கட்ட தவறியதால் பிணை அளித்தவர்களின் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களின் நிலத்தைப் புணைவிளையாகப் பெற்றுக்கொள்ள யாரும் முன்வராததால் நிலத்தின் ஒரு பகுதியினை கோயில் நிர்வாகத்தினரே விலைக்குப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டினர். கோயில் பயன்பாட்டில் இல்லாமல் இருந்த ஆபரணங்களை விற்று அந்நிலத்தினைக் கோயிலுக்காக வாங்கியுள்ளனர்.

### பொய் கணக்கு எழுதியவற்கு தண்டனை

தஞ்சை மாவட்டத்தில் உள்ள கள்ளப்பெரம்பலூர் கைலாசநாதர் கோயில் கருவறையின் வடக்குபுற சுவரில் உள்ள மூன்றாம் இராசராச சோழனின் பத்தொன்பதாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு, பொய் கணக்கு எழுதியதற்காக கொடுக்கப்பட்ட தண்டனையைப் பற்றிக் கூறுகிறது. "நம்மூரில் காணி உடைய நாய் கணக்கெழுதி வன்தசேஞலூருடையான் மதளை உத்தமப் பிரியன் எல்லோமுக்கும் மேற்க்கிராமத்துரோகியாய் கணக்கெழுதலாகா தொழிகையால் இவனும் இவன் வங்கிஷத்தாரும் இவன் உறவுமுறையென்று வந்து கணக்கெழுதுவார்களாகில் திருவாணை புவன முழுதுடையாராணை…" என்ற கல்வெட்டு வரியால் மூன்றாம் இராசராச சோழன் காலத்தில் சேஞலூருடையான் மதளை உத்தமபிரியன் என்பவன் பொய்க்கணக்கு எழுதியதை அவ்வூர் சபையோர் தணிக்கை செய்தபோது கண்டறிந்தனர். உடனே அவனை அரசுப்பணியில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டான். அதோடுமட்டுமன்றி இனி அவனும், அவனுடைய வழித்தோன்றல்களாக வருகின்றவர்களும், அவனுடைய உறவினர் என்று சொல்லிக்கொண்டு வருகின்ற எவரும் ஊர்கணக்கு எழுதுவதற்கு நிரந்தர தடைவிதித்த தகவலைக் கூறுகிறது.

### நீர்நிலைகளைப் பாதுகாத்தல்

எதிர்காலத்தில் தமிழக நதிகள் அனைத்தும் பொய்த்துப்போகும் என்பதை கருத்தில்கொண்டு 39, 202 நீர்நிலைகள் மன்னர்களாலும், செல்வந்தர்களாலும் மற்றும் சாமானிய மக்களாலும் உருவாக்கப்பட்டுள்ளன. 2200 ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியாவை தமது தர்மக் கோட்பாடுகளால் நல்லாட்சி புரிந்த மாமன்னன் அசோகர், சாலையோரங்களில் அரை கோசிற்கு ஓரிடத்தில் (ஒன்றேகால் மைல் தொலைவு) கிணறுகளை வெட்டுவித்தும், மாந்தருக்கும், விலங்கிற்கும் எனத் தனித்தனியாக தண்ணீர் பந்தல்களை ஏற்படுத்திகொடுத்துள்ளதை அசோகரின் ஏழாவது கற்றூண் ஆணையின் மூலம் அறியமுடிகிறது. அதாவது நீர்நிலைகளை ஏற்படுத்துவது சிறந்த அறமாகும் என்பது அசோக மாமன்னனின் தர்மக்கோட்பாடுகளில் ஒன்றாகும். இதன்மூலம் இந்தியாவை ஆண்ட மன்னர்கள் நீர்நிலைகளை ஏற்படுத்துவது மற்றும் அதைக் காப்பதைச் சிறந்த அறமாகக் கொண்டிருந்ததையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

குறிப்பாகத் தமிழக வரலாற்றில் ஏரிகளை வெட்டுவிப்பது மட்டுமே மன்னனின் கடமை. ஏரிகளைப் பராமரிப்பது, தண்ணீரைப் பயன்படுத்தும் மக்களின் கடமையாக இருந்துள்ளன. இதற்கு உதாரணமாக புதுவை மாநிலத்தில் உள்ள பாகூர் திருமூலநாதர் கோயிலில் கி.பி. 1027 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள முதலாம் இராஜேந்திர சோழன் கல்வெட்டில், பத்து வயதிற்கு மேல் உள்ளவரும் என்பது வயதிற்கு உட்பட்டவர்களும் கட்டாயமாக ஏரியின் மராமத்து பணியில் ஈடுபடவேண்டும். அவ்வாறு வராதவர்களுக்குத் தண்டம் விதிக்கப்படும் என்ற கட்டளையை வலியுறுத்துகிறது. மேலும் இதுபோன்ற அறப்பணிகளில் ஒவ்வொருவரையும் ஈடுபட வைப்பதன்மூலம், அவர்களை சமூக அக்கறை மற்றும் சமூக பொறுப்புள்ளவர்களாக மாற்றமுடியும் என்று அக்கால அரசர்கள் கருதியதன் வெளிப்பாடே இக்கல்வெட்டாகும். அதனால்தான் மன்னர்கள் வெட்டுவித்த ஏரி, குளம், வாய்க்கால்களைப் பாதுகாப்பதும். மராமத்துப் பணிகளைச் செய்வதையும் சிறந்த அறமாகவே அக்கால மக்களும் கருதினர்.

திருவண்ணாமலை அருகே உள்ள சிறுபாக்கம் கிராமத்தில் காணப்படும் முதலாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டில், இவ்வூரில் உள்ள ஏரியைப் பாதுகாப்பவர்களின் திருப்பாதங்களை தன் தலைமீது வைத்து தாங்குவேன் என்று குறிப்பிடப்பட்டிருப்பது சிந்திக்கவைக்கிறது. இதேபோன்று சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள தாசசமுத்திரம் ஏரிக்கரையில் கி.பி 996 ஆம் ஆண்டு முதலாம் இராஜராஜசோழன் காலத்தில் வெளியிடப்பட்ட கல்வெட்டு ஒன்றுள்ளது. அதில் “ஸ்வஸ்தி ஸ்ரீ இராஜராஜ சோழதேவற்கு திருவெழுத்திட்டுச் செல்ல நின்ற திருநல்லியாண்டு பதினொன்றாவது வட பூவாணிய நாட்டு கச்சிப்பள்ளி காமிண்டந் பொங்கிலந் அமன்தாத் களியும் எந்தம் பியும் இவ்விருவே மேன்கள்கையால் மணலொழுக்கி இவ்வேரி கட்டினோம். இந்த அழிவு படாமற் காத்தாந் காலெந் தலை மேலென” அதாவது இராஜ ராஜசோழன் காலத்தில் கச்சிப்பள்ளி காமிண்டன் என்பவனும் அவனது தம்பியும் தாச சமுத்திரம் கிராமத்தில் ஏரியை வெட்டுவித்த செய்தியைக் கூறுகிறது. இந்த ஏரியை அழிவுபடாமல் யார்யார் காப்பார்களோ அவர்களின் கால்களை என் தலைமீது வைத்துத் தாங்குவேன். இதற்கு பாதம் பணிவேன் என்ற பொருளுமுண்டு. இதன்மூலம் நீர்நிலைகளைப் பாதுகாப்பதில் சோழ மன்னர்கள் காட்டிய அக்கறை சிறப்புக்குரியது. சில கல்வெட்டுக்கள் நீர் நிலைகளுக்குக் குந்தகம் விளைவிக்காமல் அதைப் பாதுகாப்பவர்கள் சொர்க்கம் செல்வார்கள் என்று குறிப்பிடுகிறது. இதன்மூலம் நீர் மேலாண்மைக்காக மன்னர்கள் எந்த அளவிற்கு இறங்கி வந்துள்ளனர் என்பதை அறியும்போது வியப்பாக உள்ளது.

**முடிவுரை**

பண்டையகால மன்னர்கள், அரசியர், அரசு அதிகாரிகள், தனிமனிதர்கள் போன்றோர் எண்ணற்ற அறச்செயல்களை மேற்கொண்டு, மக்கள்நலப் பணிகளில் தங்களைத் தொடர்ந்து ஈடுபடுத்தி வந்துள்ளனர். இந்தியாவில் இதுவரை சுமார் 90,000 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இந்த எழுத்து ஆவணங்கள் ஒவ்வொன்றும் ஒரு வரலாற்று நிகழ்வை தன்னகத்தே கொண்டனவாகும். பழங்காலத் தமிழக எழுத்து ஆவணங்கள் தொடக்ககாலம் முதல் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்த மக்களின் வாழ்வியல், சமுதாய நெறிமுறைகள், வரலாற்று நிகழ்வுகள் போன்றவற்றை வடித்துக்காட்டும் காலக் கண்ணாடிகளாக விளங்குகின்றன. இவ்வாணங்களில் மக்கள் தொண்டை இறைத்தொண்டுக்கு நிகராக போற்றியமைப் பற்றி அதிக தகவல்கள் உள்ளன.

**குறிப்பு நூல் பட்டியல்**

1. தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள் தொகுதி – V
2. தென்னியந்தியக் கல்வெட்டு தொகுதி – XVII, No.629
3. நன்னிலம் கல்வெட்டு தொகுதி - இரண்டு, எண். 268, 269
4. ஆய்வுச் சிந்தனைகள் தொகுதி – 15
5. கா.ராஜன், கல்வெட்டியல்
6. சி.கோவிந்தராசன், கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி
7. பல்லவர் செப்பேடுகள் முப்பது